மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை
*ஒ.எஸ்.117/2019*
2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02-ம் நாள் திங்கட்கிழமை

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்திரன் | சாதி | : |
| த-பெ | : | சமயம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

**வா.சா.1 சந்திரன் ஆஜர்.**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 1வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 16.06.1984ம் தேதிய வாதியின் கிரையத்திற்கு ஆதரவாக 1ம் பிரதிவாதிக்கு அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட யுடிஆர் சர்வே நோட்டீஸ் அசல் **வா.சா.ஆ.1.**
2. 02.03.2016ம் தேதிய தாவா சொத்திற்கு வாதி செலுத்திய தீர்வை ரசீது அசல் **வா.சா.ஆ.2.**
3. 03.01.2019ம் தேதிய வாதி வீரசோழன் சார்பதிவாளருக்கு அனுப்பிய மனு பதிவு தபால் ரசீதுடன் உண்மை நகல் **வா.சா.ஆ.3**.
4. 05.01.2019ம் தேதிய வீரசோழன் சார்பதிவாளர் வாதியின் மனுவினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.4.**
5. 08.01.2019ம் தேதிய வாதிக்கு வீரசோழன் சார்பதிவாளர் அனுப்பிய கடிதம் வாதியின் மனு, கேட்பு காசோலையுடன் அசல் **வா.சா.ஆ.5.**
6. 05.01.2019ம் தேதிய வாதி மானாமதுரை வட்டாட்சியருக்கு அனுப்பிய மின்னஞ்சல் கோரிக்கை மனு பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.6.**
7. 10.01.2019ம் தேதிய வாதி மானாமதுரை வட்டாட்சியருக்கு மனு அனுப்பிய பதிவு தபால் ரசீது உண்மை நகல் **வா.சா.ஆ.7.**
8. 11.01.2019ம் தேிதய மானாமதுரை வட்டாட்சியர் வாதியின் மனுவினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.8.**
9. 11.01.2019ம் தேதிய வாதி மானாமதுரை மண்டல துணை வட்டாட்சியருக்கு மனு அனுப்பிய பதிவு தபால் ரசீது உண்மை நகல் **வா.சா.ஆ.9.**
10. 12.01.2019ம் தேதிய மானாமதுரை மண்டல துணை வட்டாட்சியர் வாதியின் மனுவினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.10.**
11. 25.01.2019ம் தேதிய மானாமதுரை மண்டல துணை வட்டாட்சியர் தாவா சொத்தின் பட்டாவினை 1ம் பிரதிவாதி பெயரிலிருந்து 2ம் பிரதிவாதி பெயருக்கு ம ாற்றிய உத்தரவு பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.11.**
12. 16.07.2019ம் தேதிய மானாமதுரை வட்டாட்சியர் வாதிக்கு அனுப்பிய குறிப்பாணை அசல் **வா.சா.ஆ.12.**

13. 2023-2024 வாதிக்கு சிகிச்சை பெற்று வருவதற்கான மருத்துவரின் அறிக்கை மற்றும் மேற்குறிப்புகள் அசல் **வா.சா.ஆ.13.**

Taken down by me in open court
readover/interpreted to the witness
in Tamil and acknowledged by
him/her to be correct.

District Munsif,
Manamadurai.